குற்றவாளிகளை எல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு!

கல்வியாளர்களை அச்சுறுத்திப் பார்ப்பதா?

பேராசிரியர் கலையரசன் கைது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

சென்னை, அக். 31-

"குற்றவாளிகளையெல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு கல்வியாளர்களை அச்சுறுத்திப் பார்ப்பதா?" என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேராசிரியர் கலையரசன் கைது செய்யப்பட்டது குறித்து கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.


இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

த.வெ.க. ஆட்சியில் வரலாறு காணாத விலைவாசி உயர்வை அம்பலப்படுத்தியதற்காக #DravidianModel ஆசிரியர் கலையரசன் அவர்கள் சட்டவிரோதமாகக் கைது: த.வெ.க. அரசின் உச்சகட்ட பாசிசம்!

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் (MIDS) உதவிப் பேராசிரியராக உள்ள முனைவர் கலையரசன் அவர்களை நேற்று முன்தினம் அதிகாலை, சீருடை அணியாத காவலர்கள் சட்டவிரோதமாகக் கைது செய்து, வாடகை வாகனத்தில் ஏற்றிச் சென்ற செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சிக்கு உள்ளானேன். கைது செய்யப்பட்டவர் சாதாரண நபரோ, குற்றப் பின்னணி கொண்டவரோ இல்லை.

தெரியாமல் கைது செய்துவிட்டோம் என்று கூறுவதா?

கலையரசன் அவர்கள் தமிழ்நாட்டின் முதன்மையான ஆராய்ச்சி நிறுவனத்தில் பணிபுரியும் பேராசிரியர். இந்தியாவின் தலைசிறந்த பல்கலைக்கழகமான JNUவில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். உலகின் தலைசிறந்த பல்கலைக்கழகமான கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் பதிப்பித்த "The Dravidian Model" நூலின் ஆசிரியர்களில் ஒருவர். ஒன்றிய அரசின் திட்டக்குழுவில் பொறுப்பு வகித்தவர். தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கையைத் தயார் செய்வதில் பங்களித்தவர். எல்லாவற்றுக்கும் மேல், தமிழ்நாடு முதலமைச்சர் தலைவராக இருக்கும் தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இப்போதும் இருப்பவர்.



அப்படிப்பட்டவரைத் தெரியாமல் கைது செய்துவிட்டோம் என்று கூறுவது நம்பும்படி இல்லை. செய்யாத குற்றத்திற்காக, அடிப்படை உரிமைகள் அனைத்தையும் மறுத்து, அவரது செல்போனைப் பறித்து, கைது செய்து அலைக்கழித்ததைச் சாதாரணச் செயலாக எவரும் கடந்துபோக முடியாது. குற்றவாளிகளை எல்லாம் கூத்தடிக்க விட்டுவிட்டு, கல்வியாளர்களை அச்சுறுத்திப் பார்ப்பது எவ்வளவு பெரிய அசிங்கம்?

உண்மையைச் சொன்னதற்காக கைது செய்வதா?

கலையரசன் அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டார்? Dravidian Model என்ற பதத்தை முன்வைத்து, திராவிட ஆட்சியால் தமிழ்நாடு அடைந்த வளர்ச்சியை உலகம் முழுவதும் பறைசாற்றியதற்காகவா? த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகுதான், தமிழ்நாடு இதுவரை சந்தித்திராத விலைவாசி உயர்வைச் சந்தித்துள்ளது என்ற உண்மையைச் சொன்னதற்காகவா?

முட்டாள்களால் நிறைந்த த.வெ.க.!

முட்டாள்களால் நிறைந்த த.வெ.க.வுக்கும் கல்விக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது அனைவரும் அறிந்ததுதான். ஆனால், கல்வியாளர்களைக் கைது செய்து மிரட்டும் அளவுக்கு அறிவின் மீது ஒவ்வாமை கொண்டவர்களாக இவர்கள் நடந்துகொள்வார்கள் என நிச்சயமாக நினைக்க வில்லை. பாசிசத்தில் பா.ஜ.க.வையும் மிஞ்சி விடுவார்கள் என்பதைத்தான் இந்தக் கைது காட்டுகிறது. முதல மைச்சரின் ஒப்புதலோடும் உயரதிகாரிகளின் அனுமதியோடும்தான் இந்த அத்துமீறல் நடக்கிறதா?

அரசிற்கு ஆதரவளிக்கும் கட்சிகள் கண்டும் காணாமல் இருப்பது ஏன்?

முனைவர் கலையரசன் அவர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர் அல்ல. கடந்த ஆட்சிக்காலத்திலும், அவர் சுதந்திரமாகத் தன்னுடைய விமர்சனக் கருத்துகளை முன்வைத்திருக்கிறார். ஆனால், இந்தத் தரங்கெட்ட த.வெ.க. ஆட்சியோ, எங்கள் ஆட்சியைப் பற்றியோ நிர்வாகத் தோல்விகளைப் பற்றியோ ஊடகங்களில் உண்மையைப் பேசினால் விளைவுகள் மோசமாக இருக்கும் என்று மிரட்டும் ரவுடி அரசாகச் செயல்பட்டுள்ளது. இப்படிப்பட்ட அரசிற்கு ஆதரவு அளித்துக் கொண்டு இருக்கும் கட்சிகள், இந்த அநியாயத்தைக் கண்டும் காணாமல் இருப்பது ஏன்? இதுதான் இவர்கள் பாசிசத்தை எதிர்த்துக் கேள்வி கேட்கும் அரசியலா?

புகழ்பெற்ற பேராசிரியர் மீது பொய்யான குற்றச்சாட்டைப் புனைந்து, அவரை அலைக்கழித்து, துன்புறுத்திய த.வெ.க. அரசின் பாசிச செயல் கடும் கண்டனத்துக்குரியது. தமிழ் நாடு காவல் துறையும், அதற்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் அவர்களும் முனைவர் கலையரசன் அவர்களிடம் பகிரங்கமாக மன்னிப்பு கேட்க வேண்டும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட் டுள்ளார்.

அறிவுடைமையின் அருமை புரியாதவர்கள் நடத்தும் ஆட்சியில்

கலைஞர்களும் கல்வியாளர்களும் வஞ்சிக்கப்படுவார்கள்!

பொருளாதார அறிஞர் கலையரசன் கைதைக் கண்டித்து – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலைதளப்பதிவு !

சென்னை, அக்.31–

பேராசிரியரும் பொருளாதார அறிஞருமான கலையரசன் அராஜகமான முறையில் நேற்று கைது செய்யப்பட்டதையடுத்த விடுத்த வலைதளப்பதிவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி., 'அறிவுடைமையின் அருமை புரியா தவர்கள் நடத்தும் ஆட்சியில் கலைஞர்களும் கல்வியாளர்களும் வஞ்சிக்கப்படுவார்கள்!" எனத் தமது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.



அவரது வலைதளப் பதிவு வருமாறு:–

பேராசிரியரும் பொருளாதார அறிஞருமான கலையரசன் அவர்களை நேற்று அதிகாலையில் பொய்க் குற்றச்சாட்டுகளைக் கூறி அராஜகமான முறையில் கைது செய்து, அலைக்கழித்து, மன உளைச்சலுக்கு ஆளாக்கியுள்ள தவெக அரசுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலைவாசி உயர்வு, சட்டம் ஒழுங்குப் பிரச்சினை என இந்த அரசின் நிர்வாகச் சீர்கேடுகளை விமர்சிக்கும் எவர் ஒருவரும் காவல்துறையின் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்ற மிரட்டலாகத்தான் இந்தக் கைது சம்பவம் இருக்கிறது.

அறிவுடைமையின் அருமை புரியாதவர்கள் நடத்தும் ஆட்சியில் கலைஞர்களும் கல்வியாளர்களும் வஞ்சிக்கப்படுவார்கள்.

த.வெ.க.வின் ஆட்சி அப்படியானதே!

இவ்வாறு அப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மழை நீர்த் தேக்கம்! பொதுமக்கள் பாதிப்பு!

கோவை மாநகரில் சாலைகளை உடனடியாகச் செப்பனிடுவீர்!

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் வலியுறுத்தல்!

கோவை, அக். 31 -

உள்ளாட்சித் தேர்தல் நெருங்கி வர உள்ள நிலையில் மாநகராட்சியில் செய்ய வேண்டிய அடிப்படை தேவைகளை வேண்டுமென்றே த.வெ.க. அரசு செய்யாமல் மாமன்றத்தில் அதிகமாக உள்ள திமுக கவுன்சிலர்களுக்கு அவப் பெயர் ஏற்படுத்த நினைக்கிறார்கள் என திமுக தீர்மானக்குழு மாநில செயலாளரும், முன்னாள் மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளருமான நா.கார்த்திக் கோவையில் செய்தியாளர்கள் சந்திப்பில் குற்றம் சாட்டியுள்ளார்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கோவையில் செம்மொழிப் பூங்கா, ஜி.டி. நாயுடு மேம்பாலம், பெரியார் நூலகம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட தற்போதைய நிர்வாகத்தில் பல பணிகள் முடங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

கோவையில் பெய்த மழையால் பல்வேறு பகுதிகளில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்து பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மழைக்காலத்திற்கு முன்பாக ஓடைகள், ராஜா வாய்க்கால் உள்ளிட்ட நீர் வழித்தடங்களை முறையாகத் தூர்வாராததே இதற்குக் காரணம் எனக் குற்றம்சாட்டியவர், பல இடங்களில் சாலைகள் சேதமடைந்துள்ளதுடன், கோவை கிழக்கு மண்டலத்தில் நூற்றுக்கணக்கான பணிகள் நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும், பேசிய கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக்; புதிய நிறுவனங்கள் ஒப்பந்தப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பழைய டெண்டர் எடுத்த அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பித்தால், தொழில்நுட்பத் தகுதி இல்லை எனக் கூறி சில பணிகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

பூங்கா பராமரிப்புப் பணிகளுக்கான ஒப்பந்தத்



தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், மாமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்தும் அதிகத் தொகைக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தி.மு.க.வுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தும் நோக்கில் அதிகாரிகள் செயல்படுவதாகவும் குற்றம்சாட்டினார்.

எனவே, மழைநீர் வீடுகளுக்குள் புகுவதைத் தடுக்க மாநகராட்சி மற்றும் மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள வளர்ச்சிப் பணிகளை விரைந்து முடித்து மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; அங்கிங்கெனாதபடி எங்கப் பார்த்தாலும், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆள்கடத்தல்ன்னு செய்தியும், பெருவாரியான வற்றில் த.வெ.க.வினர் இருப்பது பற்றிய செய்தியும் வந்த வண்ணம் இருக்கே. இதப்பத்தி என்ன நினைக்கிற?

பட்டணம் : ஆமாமய்யா; நினைக்கிறதுக்கு என்ன இருக்கு! 'ஆல் ஏரியாவிலேயும் அண்ணன் தான் கில்லிங்கறது' ஞாபத்துக்கு வருது, காலம் இப்படியே போகாது. வினை விதைத்தவன் வினை அறுப்பான்! பார்க்கத் தானே போறோம்.

நிர்வாகத்திறனற்ற 'டம்மி' முதல்வரின் லட்சணம் பாரீர்!

பருவமழை தீவிரம்! 10 நாட்களாக ஒரு அறிக்கைகூட இல்லை!

தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையத்திடம் சிக்கிய விஜய் அரசு! முழு பின்னணி!

சென்னை, அக். 31-

அக்டோபர் 16 முதல் அக்டோபர் 26 வரை, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் மத்திய கட்டுப்பாட்டு அறைக்குத் தமிழக அரசு தினசரி சூழ்நிலை அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியுள்ளது.

வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ள இச்சூழலில், மாநிலத்தில் நிலவும் பேரிடர் பாதிப்புகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்த கள நிலவரத்தை ஒன்றிய அரசுக்குத் தெரிவிக்கும் முதன்மை ஆவணமாக இந்த அறிக்கை திகழ்கிறது. இவ்வளவு முக்கியமான தரவுகளைத் தொடர்ந்து 10 நாட்களாகத் தமிழக அரசு சமர்ப்பிக்காதது, பேரிடர் மேலாண்மை நிர்வாகத்தின் மீதான தீவிரக் கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்ததினசரி அறிக்கைகளின் அடிப்படையில்தான், எந்தெந்த மாவட்டங்களில் அதிக பாதிப்புகள் உள்ளன என்பதையும், கூடுதல் தேசிய பேரிடர் மீட்புப் படைகளை எங்கு அனுப்ப வேண்டும் என்பதையும் ஒன்றிய உள்துறை அமைச்சகம் தீர்மானிக்கிறது.

மாநில அரசு இந்தத் தரவுகளை அளிக்கத் தவறும்போது, அவசர காலங்களில் மீட்புப் படைகளை உடனுக்குடன் அனுப்புவதில் பெருந்தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும், இந்திய வானிலை ஆய்வு மையம் வழங்கும் எச்சரிக்கைகளுக்கு மாநில அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் இந்த அறிக்கையே வெளிப்படுத்தும் என்பதால், இதன் பங்கு மிக முக்கியமானதாகும்.

பாதிப்புகள் மற்றும் தேவைகள் குறித்த முழுமையான அறிக்கைகள் முறையாகப் பதிவு செய்யப்படாவிட்டால், எதிர்காலத்தில் பேரிடருக்குப் பிந்தைய சேத மதிப்பீடுகளைக் கணக்கிடுவதிலும், ஒன்றிய அரசிடமிருந்து அவசரகால நிவாரண நிதியைப் பெறுவதிலும் கடுமையான நிர்வாக முட்டுக்கட்டைகள் ஏற்படும்.

அக்டோபர் மாத இறுதியில் வங்கக் கடலில் புயல் சின்னங்கள் உருவாகும் வாய்ப்புள்ளதாகவும், சென்னை உள்ளிட்ட பல மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ள சூழலில், இந்தத் தரவுப் பகிர்வுத் தாமதம் எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

'வாட்ஸ் அப்'பில் வரும் செய்தி!




பாருங்க ப்ரோ, ரெக்கார்ட் பிரேக்கர் ப்ரோ..

பாத்தீங்களா எங்க தலைமைத் தற்குறியின் தரங்கெட்ட ஆட்சியில் விலைவாசில எப்படி தமிழ்நாட்டை இந்தியாவிலேயே முதலிடத்திற்கு கொண்டு வந்திருக்கோம்..

-தி.மு.க. ஐ.டி. விங் பதிவு!





BURNING A HOLE IN THE POCKET

Tighter supplies and concerns about the next harvest have lead to a spike in prices, say govt officials

Commodity	Chennai, a year ago	Chennai	Delhi	All-India average
Rice	58	80	47	48.12
Wheat	44	47	34	32.32
Atta	43	42	35	37.83
Sugar	46	56	62	58.78
Potato	57	58	22	22.69
Onion	40	68	50	53.32
Tomato	55	50	38	39.62
Tur dal	122	152	153	132.96
Groundnut oil	175	213	231	211.74
Sunflower oil	169	191	213	191.45

(In ₹)